# Snapchatடைப் பயன்படுத்துவதற்கு பெற்றோர் & காப்பாளருக்கான வழிகாட்டி



## உள்ளே என்ன இருக்கிறது?

- Snapchatடின் அம்சங்கள்
- அடிக்கடி கேட்கப்படும் பொதுவான கேள்விகள்
- பாதுகாப்பு மற்றும் நலன் வளங்கள்
- உரையாடலைத் தொடங்கும் விஷயங்கள்

# Snap Inc.-இல் பணியாற்றும் பெற்றோரிடமிருந்து ஒரு கடிதம்

அன்பார்ந்த பெற்றோர் மற்றும் காப்பாளர்களே,

பதின்வயதிலிருக்கும் உங்கள் மகனோ மகளோ ஒரு Snapchat கணக்கைத் தொடங்கியுள்ளார். இப்போது என்ன? உங்களுக்கு இதுபற்றி ஐயம் வருகிறது. தங்களுடைய உள்ளடக்கங்களில் பெரும்பாலானவை இயல்பாக அழிகின்ற ஒரு செயலியை உங்கள் பதின் பருவ மகனோ மகளோ பயன்படுத்த விரும்புவது எதற்காக? சமூகத் தளங்கள் தொடர்ந்து மாறிக்கொண்டிருக்கின்றன, இதையெல்லாம் கவனத்தில் வைப்பது கடினமாக இருக்கலாம் என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். இதுபற்றிக் கேள்விகள், கவலைகள் எழுவது இயல்புதான், Snapchat பற்றிக் கற்றுக்கொள்வதற்கு, உங்கள் பதின் பருவத்தினருக்குக் கற்றுத்தருகிற, ஆற்றலளிக்கிற ஒரு வளமாக மாறுவதற்கு இந்த வழிகாட்டி உங்களுக்கு உதவும் என்று நாங்கள் நம்புகிறோம்.

எங்கள் செயலியைப் பயன்படுத்தும்போது உங்கள் பதின் பருவத்து மகனோ மகளோ நன்கு பாதுகாக்கப்படவேண்டும், நன்கு தகவல் அறிந்திருக்கவேண்டும் என்று உறுதிப்படுத்திக்கொள்ள நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம்.

எங்களுடைய இலக்கு, பதின்பருவத்தினர் தங்களுடைய படைப்புணர்வையும் உண்மையான உள்ளத்தையும் வெளிப்படுத்துவதற்கான ஓர் இடத்தை வழங்குவது. Snapchat வழக்கமான சமூக ஊடகங்களிலிருந்து மாறுபட்டுள்ளது, ஏனெனில், நெருங்கிய நண்பர்களுடன் தொடர்பில் இருப்பதற்கான ஒரு மகிழ்ச்சியான வழியாக இந்தச் செயலி உருவாக்கப்பட்டுள்ளது, முன் பின் தெரியாதவர்களுடன் இல்லை.

> "தங்களுடைய உள்ளடக்கங்களில் பெரும்பாலானவை இயல்பாக அழிகின்ற ஒரு செயலியை என்னுடைய பதின் பருவ மகனோ மகளோ பயன்படுத்த விரும்புவது எதற்காக?"

மற்ற தளங்களைப் போலின்றி, நாங்கள் பொதுக் கருத்துகளை அனுமதிப்பதில்லை, எங்களுடைய இயல்புநிலை அமைப்புகளின்படி, தான் நண்பராகச் சேர்த்த மக்களிடமிருந்து மட்டும்தான் ஒரு Snapchat பயனரால் செய்திகளைப் பெற இயலும்.

நண்பர்களுடன் பேசுவதைத் தாண்டி, குடும்பங்கள் ஒருவரோடொருவர் தொடர்பில் இருப்பதற்கும் Snapchat மிகச் சிறப்பாகப் பயன்படும். உங்களுடைய படைப்புணர்வைப் பயன்படுத்தி ஒரு மகிழ்ச்சியான, இயல்பான வழியில் தகவல் தொடர்புகளை நிகழ்த்த Snapchat உங்களுக்கு உதவுகிறது! (செய்யவேண்டிய விஷயங்களின் பட்டியலைப்பற்றியோ, பாத்திரம் தேய்ப்பதற்கான நினைவூட்டல்களைப்பற்றியோ கவலைப்படாமல்) ஒருவருக்கொருவர் மகிழ்ச்சியாக இருப்பதற்குமட்டுமான இடம் இது. நீங்கள் கவலைகளை மறந்து அசட்டுத்தனமான படங்களை அனுப்பி (உங்கள் கேமரா சுருளை நிரப்பாமல்!) அந்தக் கணத்தின் மகிழ்ச்சியை அனுபவிக்க உங்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கிறது. உங்கள் பதின் பருவத்து மகனோ மகளோ பள்ளியில் இருக்கும்போது, உங்கள் குடும்பச் செல்லப்பிராணியின் Snap படங்களை Snapchat-ஐப் பயன்படுத்தி அவருக்கு அனுப்புங்கள், அல்லது, உங்கள் பதின் பருவத்து மகனையோ மகளையோ சிரிக்கவைப்பதற்கு எங்கள் லென்ஸஸைச் சேருங்கள்!

தகவல் தொடர்புக்கு உதவுகிற எந்தச் செயலியையும் தவறாகப் பயன்படுத்துவது சாத்தியம் என்பதை நாங்கள் புரிந்துகொண்டுள்ளோம். அதனால்தான், எங்கள் தளத்தின் பாதுகாப்பில் நாங்கள் அதிக கவனம் செலுத்தி, வளங்கள் மற்றும் ஆற்றலைச் செலுத்திக் கவனத்துடன் உழைத்துள்ளோம், தொடர்ந்து உழைக்கிறோம். விரிவான செயலிக்குள் புகார் செய்தல், எங்கள் சமூக வழிகாட்டுதல்கள் மற்றும் பலவிதமான சுறுசுறுப்பான பாதுகாப்புக் கூட்டு நிறுவனங்களின்மூலம், பதின் பருவத்தினருடைய பாதுகாப்புதான் எங்களுக்கு முக்கியம் என்பதை நாங்கள் அவர்களுக்குத் தெரிவிக்கிறோம்.

நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் உங்களைப் பாதுகாப்பாக வெளிப்படுத்தவும், அந்தக் கணத்தின் மகிச்சியை அனுபவிக்கவும், உலகைப்பற்றிக் கற்கவும், ஒன்றாக மகிழ்ச்சியாக இருக்கவும் உங்களுக்கு ஆற்றலளிக்கிற கூடுதல் தகவல்களை உங்களுக்கு வழங்குவதற்காக நாங்கள் இந்தப் பெற்றோர் கையேட்டை உருவாக்கியுள்ளோம். உங்கள் பதின் பருவத்து மகனோ மகளோ இணையத்தில் என்ன செய்கிறார் என்பதைப்பற்றி அவருடன் வெளிப்படையான மற்றும் நேர்மையான உரையாடல்களை நீங்கள் தொடர்ந்து நிகழ்த்தும்போது, இது உங்களுக்கு உதவும் என்று நாங்கள் நம்புகிறோம்.

**நினைவிருக்கட்டும், உங்களுக்காகவும் உங்கள் பதின் பருவத்து மகன் அல்லது மகளுக்காகவும் நாங்கள் இங்கு இருக்கிறோம்!**

**- Snap Inc.-இல் பணியாற்றும் பெற்றோர்.**



# உள்ளடக்கம்

3
Snapchat என்றால் என்ன?

4
அடிக்கடி கேட்கப்படும் பொதுவான கேள்விகள்

6
முதல் நிலை அம்சங்கள்

7
எங்கள் தனியுரிமைக் கோட்பாடுகள்

8
உதவுகின்ற பாதுகாப்புக் குறிப்புகள்

9
நலன் வளங்கள்

10
உங்கள் பதின் பருவத்து மகன் அல்லது மகளிடம் Snapchat பற்றிப் பேசுவது எப்படி

# Snapchat 101

## Snapchat என்றால் என்ன?



ஒரு பெற்றோர் அல்லது கல்வியாளர் என்றமுறையில், Snapchat பற்றி நீங்கள் அறிந்திருக்கலாம். இப்போதெல்லாம் பதின் பருவத்தினர் தங்களுடைய நண்பர்களுடன் தகவல் தொடர்பை நிகழ்த்துகிற மிகச் சில வழிகளில் ஒன்றான உரையாடல் மற்றும் கேமரா செயலி இது. மிகத் தொடக்கத்திலிருந்தே, உண்மையான நண்பர்கள் வெவ்வேறு இடங்களில் இருக்கும்போது ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்வதற்கும், அந்தக் கணத்தில் தங்களை வெளிப்படுத்துவதில் வசதியாக உணர்வதற்கும் உதவுவதில் நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம். மக்களைத் தங்களுடைய கேமராவின்மூலம் தங்களை வெளிப்படுத்துவதற்கு வசதியாக உணரச் செய்யும் ஒரு கருவியாக Snapchat உருவாக்கப்பட்டது.

Snapchat வழக்கமான சமூக ஊடகங்களிலிருந்து மாறுபட்டு உருவாக்கப்பட்டுள்ளது, நாங்கள் காரணத்துடன்தான் இவ்வாறு செய்துள்ளோம், நம் சமூகத்துக்கு அதை மேலும் பாதுகாப்பாக்கும் வழிகளில் இதை நாங்கள் உருவாக்கியுள்ளோம். Snapchat மற்றும் பிற தளங்களின் முறையான பயன்பாட்டைப்பற்றிப் பெற்றோரும் பதின் பருவத்தினரும் தொடர்ந்து உரையாடவேண்டும் என்று நாங்கள் ஊக்குவிக்கிறோம். அதற்காகத்தான் நாங்கள் இந்தக் கையேட்டை உருவாக்கியுள்ளோம்.



# அடிக்கடி கேட்கப்படும் பொதுவான கேள்விகள்


எங்களுடைய கேமராவின் மூலம், எங்களுடைய ஆக்கப்பூர்வக் கருவிகளைப் பயன்படுத்தி மக்கள் தங்களை வெளிப்படுத்துவதற்கான ஒரு வழியை நாங்கள் உருவாக்கியுள்ளோம், அவர்கள் ஒரே ஒரு Snap-இல், ஓர் உரைச் செய்தியின் வரம்புகளைத் தாண்டி மிகக் கூடுதலாகத் தங்களை வெளிப்படுத்தலாம். Snapchat-இல், நீங்கள் நீங்களாக இருக்கலாம், நீங்கள் மிகவும் அக்கறை காட்டுகிற மக்களுடன் சுதந்தரமாக இருக்கலாம், உங்களுடைய மிகப் பொதுவான கேள்விகளுக்கான சில பதில்கள், இதோ:

## 1 இந்தச் செயலி எப்படிச் செயல்படுகிறது?

நீங்கள் ஒரு கணக்குக்குப் பதிவு செய்து, உங்களுடைய Bitmoji-ஐ உருவாக்கியதும், ஆராயத் தொடங்கும் நேரம் இது! Snapchat-இல் 5 டேப்கள் உள்ளன (இடத்திலிருந்து வலமாக): வரைபடம், அரட்டை, கேமரா, கதைகள் & ஸ்பாட்லைட். Snapchat கேமராவுக்குத் திறக்கிறது.

ஒரு புகைப்படத்தை எடுக்க, கேமரா படவுருவைத் தட்டினால் போதும், அல்லது, வீடியோ எடுக்க, அதை அழுத்திப் பிடித்தால் போதும். நீங்கள் "Snaps" என்று அழைக்கப்படுகிற புகைப்படங்கள் அல்லது வீடியோக்களை நண்பர்களுக்கு அனுப்பலாம், இவை முன் பின் தெரியாதவர்களிடமிருந்து எளிய செய்தி அனுப்புதல் வசதிக்காக வடிவமைக்கப்படவில்லை. முதன்முறை ஒரு கணக்கை உருவாக்கும்போது, இயல்பு நிலையில், நீங்கள் நண்பராகச் சேர்க்காத இன்னொருவரிடமிருந்து ஒரு செய்தியைப் பெற இயலாது.

**உங்களை வெளிப்படுத்துங்கள்!**



நீங்கள் பகிரும் விஷயங்கள், எவ்வாறு அவற்றைப் பகிரலாம் மற்றும் எவ்வளவு நேரம் அவை Snapchatடில் காட்டப்பட வேண்டும் என்பது உங்களின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும்.

## 2 Snaps பற்றி எனக்கு மேலும் சொல்லுங்களேன்?

Snaps என்பவை, விரைவான மற்றும் எளிதான தகவல் தொடர்புக்காக உருவாக்கப்படுகின்றன, உண்மை வாழ்க்கை உரையாடல்களைப் போலவே! அதனால்தான், நீங்கள் ஒரு நண்பருக்கு ஒரு Snap-ஐ அனுப்பும்போது, அந்த Snap இயல்பாக அழிந்துவிடுகிறது, உரக்கப் பேசப்படும் சொற்களைப் போலவே. Snapchat முழுவதும் ஒவ்வொரு நாளும் நாங்கள் பார்க்கிற உண்மையான உரையாடல்களின் நிலையை இது தூண்டுகிறது என்று நாங்கள் நம்புகிறோம்.





நினைவிருக்கட்டும், Snaps இயல்பாக நீக்கப்படுகிறவையாக வடிவமைக்கப்பட்டிருந்தாலும், ஒரு நண்பர் ஒரு ஸ்க்ரீன்ஷாட் எடுக்கலாம், திரையைப் பதிவு செய்யலாம், அல்லது இன்னொரு சாதனத்தைக் கொண்டு படமெடுக்கவும்.



## 3 Snap-இன் பாதுகாப்புத் தரங்கள் என்ன?

Snapchat-இல் உள்ள அனைத்துப் பயனர்களும் Snap-இன் சேவை நிபந்தனைகள் மற்றும் சமூக வழிகாட்டுதல்களுக்குஇணங்க வேண்டும், இவை வெறுப்புப் பேச்சு, பாகுபாடு பார்த்தல், தவறான தகவல்களை வழங்குதல், துன்புறுத்துதல், தொந்தரவளித்தல், வன்முறை உள்ளடக்கம் மற்றும் இன்னும் பலவற்றைத் தடுக்கின்றன. இந்தக் கொள்கைகளை உருவாக்கவும் வலியுறுத்தவும் Snap-இல் தனிக் குழுக்கள் உள்ளன.



நாங்கள் எங்கள் பயனர்களை எப்படிப் பாதுகாக்கிறோம் என்பது பற்றி மேலும் தெரிந்துகொள்ள, எங்கள் தனியுரிமை மையத்தைப் பாருங்கள்.


## 4 ஒரு கணக்கை உருவாக்க ஏதேனும் வயது வரம்பு உண்டா?

ஆம். 13 வயதுக்குக் குறைவான யாரும் Snapchat-இல் ஒரு கணக்கை உருவாக்கவோ, அதைப் பயன்படுத்தவோ இயலாது. 13 வயதுக்குக் குறைவான யாருக்கும் நாங்கள் எங்கள் சேவைகளை வழிச்செலுத்துவதில்லை. 13 வயதுக்குக் குறைவான உங்கள் குழந்தையொன்று Snapchat-ஐப் பயன்படுத்தினால், உங்கள் குழந்தையின் பயனர்பெயர் மற்றும் உங்கள் உறவின் உறுதிப்படுத்தலுடன் தயவுசெய்து எங்களைத் தொடர்புகொள்ளுங்கள்.

## 5 என்னுடைய பதின் பருவத்து மகனோ மகளோ Snapchat-இல் பாதுகாப்பாக இருப்பதற்கு நான் எப்படி உதவலாம்?

Snapchat வழக்கமான சமூக ஊடகங்களிலிருந்து மாறுபட்டு உருவாக்கப்பட்டுள்ளது, நாங்கள் காரணத்துடன்தான் இவ்வாறு செய்துள்ளோம், நம் சமூகத்துக்கு அதை மேலும் பாதுகாப்பாக்கும் வழிகளில் இதை நாங்கள் உருவாக்கியுள்ளோம். Snapchat என்பது, நண்பர்கள், அன்புக்குரியவர்களுடன் இணைந்திருப்பதற்கு மற்றும் தகவல் தொடர்பு கொள்வதற்கான ஓர் இடமாகும், அதே நேரம், பாதுகாப்பாக இருப்பது எப்படி என்று அறிந்திருப்பது முக்கியம். எங்கள் கொள்கைகள், எங்கள் குழுபற்றி மேலும் கற்றுக்கொள்ளவும், பெற்றோர் மற்றும் கல்வியாளர்களுக்கான தகவல்களுக்காகவும் நீங்கள் எங்களுடைய பாதுகாப்பு மையத்தைப் பார்க்க வேண்டும் என்று நாங்கள் பரிந்துரைக்கிறோம். உங்கள் பதின் பருவத்து மகன் அல்லது மகளுக்கு உதவும் சில குறிப்புகள்: ஒரு வலுவான கடவுச்சொல்லை உருவாக்குதல், அவர்களுடைய மின்னஞ்சல் மற்றும் மொபைல் எண்ணை உறுதிப்படுத்துதல், உண்மை வாழ்க்கையில் தங்களுக்குத் தெரிந்த மக்களிடமிருந்து மட்டுமே நட்புக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் தங்கள் நண்பர்களும் அவற்றைப் பின்பற்றுவதற்கு உதவுவதற்காக எங்களுடைய சமூக வழிகாட்டுதல்களைப் படித்தல்.

**" உண்மை வாழ்க்கையில் உங்களுக்குத் தெரிந்த நண்பர்களிடமிருந்து வரும் நட்புக் கோரிக்கைகளை மட்டும் ஏற்றுக்கொள்ளுங்கள். "**




## 6 நான் ஒரு பாதுகாப்பு கவலையை எப்படி புகாரளிப்பது?

முறையற்ற பயனர்கள் மற்றும் உள்ளடக்கத்தை அடையாளம் காண்பதற்காக, செயலிக்குள் இருக்கும் புகார்கள் மற்றும் தளத்துக்கு வெளியிலான கருத்துக்கள் மூலம் எங்கள் சமூகத்தினர் எங்களைத் தொடர்புகொள்வதை நாங்கள் எளிதாக்குகிறோம். செயலிக்குள் இருக்கும் புகார் சொல்லுதல், எங்கள் ஆதரவு இணையத் தளம் மற்றும் Snapchat வாடிக்கையாளர் சேவை Twitter கணக்கின் வழியாகப் பயனர்கள் எந்த உள்ளடக்கத்தையும் அறிக்கை இடலாம். எங்களுடைய சமூக வழிகாட்டுதல்களுக்கிணங்க நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம், Snapchat-ஐ மேம்படுத்துவதற்காக கருத்துக்களைத் திரட்டுகிறோம்.

**குறிப்பு:** யாராவது *உடனடி* ஆபத்தில் இருப்பதாக நீங்கள் உணர்ந்தால், உங்கள் உள்ளூர்ச் சட்ட நடைமுறைப்படுத்தல் முகமையை உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்.




**"செயல்திறனான வழிகாட்டுதல்களை உருவாக்குதல், எங்கள் Snapchat பயனரைப் பாதுகாத்தல், படைப்புணர்வு மற்றும் தன் வெளிப்பாட்டுக்கான ஒரு பாதுகாப்பான, மகிழ்ச்சியான சூழலை வழங்குதல் ஆகியவற்றில் நாங்கள் கவனம் செலுத்துகிறோம். உங்கள் பதின் பருவத்து மகனோ மகளோ எப்போதாவது ஒரு பாதுகாப்புக் கவலையைச் சந்தித்தால், அவர்கள் எப்போதும் எங்களிடம் அதைப்பற்றி அறிக்கை இட வேண்டும்."**



# Snapchat-ஐப் பயன்படுத்துவது எப்படி முதல் நிலை அம்சங்கள்

நீங்கள் செயலியை ஆராய்ந்து பார்த்துப் பயன்படுத்த உதவுவதற்காக, Snapchat அடிப்படை அம்சங்கள் சிலவற்றைக் கீழே காணுங்கள். அம்சங்களின் முழுப் பட்டியலுக்கு, பக்கம் 12-இல் உள்ள எங்கள் Snap சொற்களஞ்சியத்தைப் பாருங்கள்.

**இதை முதலில் தெரிந்துகொள்ளுங்கள்**: Snapchat என்றாலே புகைப்படம் மற்றும் வீடியோச் செய்திகளை அனுப்புவது என்று எண்ணிவிடவேண்டாம். இதில் இன்னும் பல உண்டு. இந்தச் செயலியில் 5 டேப்கள் உள்ளன (இடத்திலிருந்து வலமாக): Snap வரைபடம், அரட்டை, கேமரா, கதைகள் & ஸ்பாட்லைட்.




## Snap வரைபடம்:

Snap வரைபடம் என்பது, எங்கள் சமூகத்தைத் தங்களுடைய மிகச் சிறந்த நண்பர்கள் மற்றும் உலகெங்குமுள்ள வெவ்வேறு இடங்களுடன் இணைக்கிறது. எங்களுடைய அனைத்துத் தயாரிப்புகளைப் போலவே, Snap வரைபடமும் தனியுரிமையை மனதில் பிரதான இடத்தில் வைத்து வடிவமைக்கப்பட்டுள்ளது, அனைத்துப் பயனர்களுக்கும் இயல்புநிலையில் இடப் பகிர்தல் அணைக்கப்பட்டுள்ளது. ஒரு Snapchat பயனர் முதன்முறை Snap வரைபடத்தைத் திறக்கும்போது, யாருடன் தங்கள் இடத்தைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறார்கள் என்பதைத் தேர்ந்தெடுக்கும்படி அவர்களிடம் கேட்கப்படுகிறது: அவர்கள் தங்களுடைய நண்பர்கள் அனைவருடனும் இதைப் பகிர்ந்துகொள்ளலாம், தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருடன் பகிர்ந்துகொள்ளலாம், அல்லது, யாருடனும் பகிர்ந்துகொள்ளாமலும் இருக்கலாம் (பேய் முறை). Snap வரைபடத்தில் உள்ள இடங்களின் மூலம், Snapchat பயனர்கள் தொழில் நேரங்களை, விமர்சனங்களைக் காணலாம், வெளியில் கொண்டு செல்கிற மற்றும் வழங்குகிற ஆர்டர்களை நிகழ்த்தலாம்.



## அரட்டை:


மிகத் தொடக்கத்திலிருந்தே, உண்மையான நண்பர்கள் வெவ்வேறு இடங்களில் இருக்கும்போது ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்வதற்கும், அந்தக் கணத்தில் தங்களை வெளிப்படுத்துவதில் வசதியாக உணர்வதற்கும் உதவுவதில் நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம். Snapchat வீடியோ, புகைப்படம், ஆடியோ மற்றும் உரை அரட்டைகளை அனுமதிக்கிறது, தொலைபேசி மற்றும் வீடியோ அழைப்புகளையும் அனுமதிக்கிறது. செய்திகள் இயல்பாக அழிக்கப்படுகின்றன, பயனர்கள் தாங்கள் ஏற்கனவே நண்பர்களாக இல்லாத ஒருவரிடமிருந்து ஒருவருக்கொருவரான அரட்டையைப் பெற இயலாது.



## கேமரா:

Snapchat தானே கேமராவுக்குத் திறக்கிறது. இங்குதான் நீங்கள் Snaps-ஐ இவற்றை வீடியோக்கள் அல்லது புகைப்படங்களாக எடுக்க இயலும். ஒரு Snap-ஐ உருவாக்கிய பிறகு, வடிகட்டிகள், உரைகள், ஸ்டிக்கர்கள், இணைப்புகள் மற்றும் பல ஆக்கப்பூர்வக் கருவிகளின் அடுக்குகளை உருவாக்கலாம். ஒரு Snap-ஐ:

- ஓர் அரட்டையில் அனுப்பலாம்
- நினைவுகளில் சேமிக்கப்பட்டது
- என் கதையில் சேர்த்து ஒரு தனிப்பட்ட கதை அல்லது சொந்தக் கதையை உருவாக்கலாம்
- நீக்கலாம்




Snapchat எப்போது Snaps மற்றும் அரட்டைகளை நீக்குகிறது என்பதுபற்றிய கூடுதல் தகவல்களுக்கு, எங்களுடைய ஆதரவுக் கட்டுரையை இங்கு காணுங்கள். இந்தச் சொற்களைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ள, 27 ஆம் பக்கத்தைக் காணுங்கள்!


## கதைகள்:

இங்குதான் Snapchat பயனர்கள் தங்களுடைய நண்பர்கள், உருவாக்குபவர்கள் மற்றும் பரந்த Snapchat சமூகத்தின் கதைகளைப் பார்க்கலாம்! Discover-இல் இருந்தும், "உங்களுக்காக" என்ற தெரிவிலிருந்தும் சந்தாக்களைப் பார்க்கிற மற்றும் காண்கிற இடமும் இதுதான்.

## ஸ்பாட்லைட்:


Snapchat சமூகத்தால் உருவாக்கப்பட்ட மிகவும் சுவாரஸ்யமான Snaps இல் ஸ்பாட்லைட் பிரகாசிக்கிறது. உள்ளடக்கத்திற்கு இடையில் நகர்த்த மேலே மற்றும் கீழ்நோக்கி ஸ்வைப் செய்வதன் மூலம் ஆராயுங்கள். நீங்கள் அதிகமாகப் பார்க்க விரும்பும் ஒன்றைக் கண்டால், அதை விரும்புவதற்கு இதயத்தைத் தட்டவும், உங்கள் ஊட்டத்தைத் தனிப்பயனாக்கவும்!






# Snapchat-இல் தனியுரிமை

# எங்கள் தனியுரிமைக் கோட்பாடுகள்





Snap-இல், நாங்கள் உங்களுடைய தனியுரிமையை ஒரு முக்கிய விஷயமாகக் கருதுகிறோம். ஒவ்வொருமுறை நீங்கள் Snapchat-ஐ, அல்லது, எங்களுடைய பிற தயாரிப்புகளில் எவற்றையேனும் பயன்படுத்தும்போதும் உங்கள் நம்பிக்கை பெறப்படுகிறது என்பதை நாங்கள் அறிவோம், ஆகவே, எங்களுடைய பெரும்பாலான தொழில்நுட்பப் போட்டியாளர்களிடமிருந்து மாறுபட்டவகையில் நாங்கள் உங்கள் தகவல்களைக் கையாள்கிறோம்.

எங்கள் தயாரிப்புகள் தொடர்ந்து மாறிவந்தபோதும், எங்கள் தனியுரிமைக் கோட்பாடுகள் மாறவில்லை:

- நாங்கள் நேர்மையாகவும் ஒளிவுமறைவு இன்றியும் தகவல் தொடர்புகளை நிகழ்த்துகிறோம்
- உங்களை எப்படி வெளிப்படுத்துவது என்று நீங்கள் தீர்மானிக்கிறீர்கள்
- தனியுரிமையை மனத்தில் கொண்டு நாங்கள் வடிவமைக்கிறோம்
- உங்கள் தகவலை நீங்கள் கட்டுப்படுத்துகிறீர்கள்

உங்கள் தனியுரிமைக்கு நாங்கள் மிகுந்த முக்கியத்துவம் தருவது எப்படி என்பதுபற்றி மேலும் கற்றுக்கொள்ள, எங்கள் தனியுரிமை மையத்தைப் பாருங்கள், அங்கு நீங்கள் எங்களுடைய தனியுரிமைக் கோட்பாடுகள், எங்கள் தனியுரிமைக் கொள்கை பற்றிய கூடுதல் தகவல்களைக் காணலாம், முக்கியப் பிரச்சனைகளின் ஒரு சுருக்கத்தை நீங்கள் தேடுகிறீர்கள் என்றால், தயவுசெய்து, "உங்கள் தனியுரிமை, விளக்கப்பட்டது" என்பதை ஆராயுங்கள்.

# Snapchat-இல் பாதுகாப்பாக இருத்தல் உதவுகின்ற பாதுகாப்புக் குறிப்புகள்

Snapchat நண்பர்கள் மற்றும் அன்புக்குரியவர்களுடன் இணைவது மற்றும் தகவல் தொடர்பு கொள்வதற்கான ஓர் இடமாகும், ஆனால், பாதுகாப்பாக இருப்பது எப்படி என்று தெரிந்துகொள்வதும் முக்கியம். எங்கள் கொள்கைகள், எங்கள் குழு பற்றிக் கூடுதலாகக் கற்றுக்கொள்ளவும், பெற்றோர் மற்றும் கல்வியாளர்களுக்கான தகவல்களுக்கும், எங்கள் பாதுகாப்பு மையத்தைப் பாருங்கள் என்று நாங்கள் பரிந்துரைக்கிறோம். நினைவிருக்கட்டும், Snapchat 13+ வயதானவர்களுக்கானது.

ஒரு மன நலன் அல்லது உணர்வு நெருக்கடியைச் சந்திக்கக்கூடிய, இந்தப் பிரச்சனைகளைப்பற்றி மேலும் தெரிந்துகொள்ள விரும்பக்கூடிய, மற்றும், இவற்றைக் கையாளும் நண்பர்களுக்குத் தாங்கள் எப்படி உதவலாம் என்று தெரிந்துகொள்ள விரும்பக்கூடிய Snapchat பயனருக்காக நாங்கள் செயலியினுள் ஆதரவையும் வழங்குகிறோம். எங்களுடைய 'உங்களுக்காக இங்கு' எனும் கருவி, வல்லுனர்களுடன் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு வளங்களை வழங்குகிறது, இதில் Snapchat பயனர்கள் பதற்றம், மனச்சோர்வு, அழுத்தம், சோகம், தற்கொலை எண்ணங்கள் மற்றும் துன்புறுத்தலுடன் தொடர்புடையவை உள்ளிட்ட குறிப்பிட்ட தலைப்புகளைத் தேடலாம்.

Snapchat-இல் பாதுகாப்பாக இருப்பதற்கான சில குறிப்புகள், இதோ!

**1 ஒரு வலுவான கடவுச்சொல்லைத் தேர்ந்தெடுங்கள்**: குறைந்தது 8 எழுத்துகள் நீளமுள்ள, உங்கள் பெயர், பயனர்பெயர், தொலைபேசி எண் அல்லது பிறந்தநாள் போன்ற தனிப்பட்ட தகவல்கள் இல்லாத ஒரு கடவுச்சொல்லைத் தேர்ந்தெடுங்கள். உங்கள் கடவுச்சொல்லில் எண்கள், சின்னங்கள் மற்றும் பெரிய (Capital) மற்றும் சிறிய (lowercase) எழுத்துக்கள் கலந்து இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள். உங்கள் கடவுச்சொல்லைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளாதீர்கள், இதே கடவுச்சொல்லைப் பிற செயலிகளுக்கு அல்லது வலைத்தளத்திற்குப் பயன்படுத்தாதீர்கள்.

**2 உங்கள் மின்னஞ்சல் மற்றும் மொபைல் எண்ணை உறுதிப்படுத்துங்கள்**: உங்கள் கணக்குடன் தொடர்புடைய மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண் ஆகியவை Snapchat அமைப்புகளில் துல்லியமாக உள்ளதா என்பதைச் சரிபார்க்கவும்.

**3 இரு காரணி அங்கீகாரத்தை அமையுங்கள்**: நீங்கள் உங்கள் Snapchat கணக்குக்குள் நுழையும்போது, உண்மையிலேயே நீங்கள்தான் அங்கு நுழைகிறீர்களா என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஒரு பாதுகாப்பு அம்சம் இது, விரும்பினால் நீங்கள் இதைப் பயன்படுத்தலாம்! இதி உங்கள் கணக்கை இன்னும் பாதுகாப்பாக ஆக்குகிறது. இதுபற்றி மேலும் தெரிந்துகொள்ள இங்கு வாருங்கள்.

**4 இது நண்பர்கள் உரையாடலாக அமையட்டும்**: Snapchat, உங்கள் நெருங்கிய நண்பர்களுடன் உங்களைத் தொடரபில் வைப்பதற்காக உருவாக்கப்பட்டது. உண்மை வாழ்க்கையில் உங்களுக்குத் தெரிந்த நபர்களைமட்டுமே நீங்கள் நண்பர்களாக்கிக்கொள்ளவேண்டும், அவர்களிடமிருந்து வருகிற நட்புக் கோரிக்கைகளைமட்டுமே ஏற்கவேண்டும் என்று நாங்கள் பரிந்துரைக்கிறோம். இணையத்தில் சந்திக்கும் நபர் ஒருவரை நேரில் சந்திப்பது பாதுகாப்பு இல்லை என்று உங்கள் பதின் பருவத்து மகன் அல்லது மகளுக்கு நினைவுபடுத்துங்கள்!

**5 உங்கள் தனியுரிமை அமைப்புகளைச் சரிபாருங்கள்**: உங்களுக்கு யார் Snaps அனுப்பலாம், உங்களுடைய கதைகளை யார் பார்க்கலாம், அல்லது, Snap வரைபடத்தில் உங்கள் இடத்தை யார் பார்க்கலாம் என்பதையெல்லாம் உங்கள் அமைப்புகளில் தேர்ந்தெடுங்கள். இயல்பாக, உங்கள் நண்பர்கள் மட்டுமே உங்களை நேரடியாக தொடர்புகொள்ளலாம் அல்லது உங்கள் கதையைப் பார்க்க முடியும்.

**6 வரைபடத்தில் உங்கள் இடத்தைத் தனிப்பயனாக்குங்கள்**: நீங்கள் திரும்பச் சேர்த்த உங்களுடைய நண்பர்கள் அனைவருடனும் நீங்கள் உங்களுடைய இடத்தைப் பகிர்ந்துகொள்ளத் தேர்ந்தெடுக்கலாம் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட நண்பர்களின் ஒரு குழுவுடன் மட்டும் இடத்தைப் பகிர்ந்துகொள்ளலாம், அல்லது, நீங்கள் யாருக்கும் தெரியாமல் விலகியிருக்க விரும்பும்போது, பேய் முறையைக்கூட நீங்கள் இயக்கலாம். நீங்கள் செயலியைப் பயன்படுத்தும்போது மட்டும்தான் Snap வரைபடம் உங்கள் இடத்தை மேம்படுத்துகிறது, உங்கள் இடத்தை யாருடன் பகிர்ந்துகொள்ளலாம் என்று நீங்கள் தேர்ந்தெடுத்தீர்களோ, அந்த நபர்களிடம் மட்டும்தான் உங்கள் இடத்தைப் பகிர்ந்துகொள்கிறது!

**7 என் கதையை யார் பார்க்கலாம் என்பதை மாற்றுங்கள்:** இயல்புநிலைத் தனியுரிமை அமைப்பின்படி, நீங்கள் சேர்த்த Snapchat பயனர்கள் மட்டும்தான் உங்கள் கதையைப் பார்க்கலாம். ஒரு Snapஐ உங்கள் கதையில் பதிவு செய்யும்போது நீங்கள் சேர்க்கும் தனியுரிமை அமைப்புகள், அந்த Snapக்கு மட்டும்தான் பொருந்தும், ஒருவேளை நீங்கள் அமைப்புகளைப் பின்னால் மாற்றினால்கூட.

**8 Snapchatல் தவறாக நடத்துதல்பற்றி அறிக்கை இடலாம்**: தொந்தரவளித்தல், துன்புறுத்தல் அல்லது வேறு பிற பாதுகாப்புக் கவலை உள்ளிட்ட, Snapchat தவறாக நடத்துதல்பற்றி நீங்கள் எப்போது வேண்டுமானாலும் அறிக்கை இடலாம். யாரேனும் உங்களை வசதியற்று உணரச் செய்தால், நீங்கள் அந்த Snapchat பயனரைத் தடையும் செய்யலாம், மற்றும், எந்தவொரு குழு உரையாடலிலிருந்தும் விலகலாம். அறிக்கை இட ஒரு Snap அல்லது கதையை அழுத்திப் பிடித்து, "Snap குறித்து புகாரளி" என்பதைத் தட்டவும்.

**9 நண்பர்களை நீக்குதலுக்கும் தடை செய்தலுக்கும் உள்ள வேறுபாடு**: நீங்கள் யாரையேனும் உங்கள் நண்பர்கள் பட்டியலில் இருந்து அகற்றினால், அவர்களால் உங்களுடைய தனிப்பட்ட கதைகள் எவற்றையும் பார்க்க இயலாது, ஆனால், அதன்பிறகும், நீங்கள் பொதுவாக அமைத்திருக்கக்கூடிய எந்த உள்ளடக்கத்தையும் அவர்கள் பார்க்கலாம். அது உங்களுடைய தனியுரிமை அமைப்புகளைப் பொறுத்தது, அவர்கள் உங்களுடன் தொடர்ந்து அரட்டை அடிக்கவோ, உங்களுக்கு Snap செய்யவோ இயலலாம். நீங்கள் ஒரு நண்பரைத் தடை செய்யும்போது, அவர்கள் உங்களுடைய கதையைப் பார்க்க இயலாது, உங்களுக்கு Snaps அனுப்ப இயலாது அல்லது உங்களுக்கு அரட்டைகளை அனுப்ப இயலாது.




# உங்களை மனத்தில் வைத்திருக்கிறோம் நலன் வளங்கள்

Snap, தன்னுடைய சமூகத்தின் பாதுகாப்பு மற்றும் நலனுக்குத் தன்னை ஆழமாக அர்ப்பணித்துக்கொண்டுள்ளது. எங்கள் Snapchat பயனர்களைப் பாதுகாப்பாக, நலமாக, தகவலறிந்தவர்களாக வைத்திருப்பதற்காக நாங்கள் குழுக்கள், தொழில்நுட்பங்கள், கொள்கைகள் மற்றும் கூட்டணிகளைப் பயன்படுத்துகிறோம்.


Snap பயனர்களுக்கு தேவையான வளங்களையும் ஆதரவையும் வழங்க தொழில் வல்லுநர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களுடன் நாங்கள் பணியாற்றி வருகிறோம். எங்கள் பாதுகாப்புக் கூட்டு நிறுவனங்களின் ஒரு முழுப் பட்டியலுக்கு, எங்கள் பாதுகாப்புக் கூட்டு நிறுவனங்கள் பக்கத்தைக் காணுங்கள்.

உங்கள் பதின் பருவத்து மகன் அல்லது மகளை ஆதரிக்க உதவுவதற்காக, Snapchat தன்னுடைய செயலியிலேயே வளங்கள் மற்றும் நலன் அம்சங்களை வழங்குகிறது, அவர்களுக்கு உணர்வு ஆதரவு தேவைப்பட்டாலும் சரி, அல்லது, வெறுமனே அரட்டை அடிக்க விரும்பினாலும் சரி! Snapchat சமூகத்தின் உறுப்பினர்கள், மன நலனுடன் தங்களுடைய சொந்தப் போராட்டத்தைச் சந்தித்துக்கொண்டிருக்கக்கூடிய நண்பர்களை ஆதரிப்பதற்காக அவர்களுக்குக் கல்வி வழங்கவும் ஆற்றல் அளிக்கவும் எங்கள் நலன் அம்சங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

**நெருக்கடி நேர உரைச் செய்தி இணைப்பு**: நாங்கள் Crisis Text Line உடன் இணைந்து பணியாற்றுகிறோம், இதன்மூலம், அமெரிக்காவில் வாழும் Snapchat பயனர்கள் பயிற்சி பெற்ற நெருக்கடி நேர ஆலோசகர் ஒருவருடன் நேரடியாக அரட்டையடிக்கலாம், இது இலவச வசதி, மேலும் 24/7 கிடைக்கிறது. இதற்கு அவர்கள் **741741 என்ற எண்ணிற்கு KIND** என்று செய்தி அனுப்பினால் போதும், அல்லது, கிரைசிஸ் டெக்ஸ்ட் லைன் என்று செயலிக்குள் தேடலாம்! ஒருவேளை, நீங்கள் அமெரிக்காவிற்கு வெ ளியில் வசித்தால், மேலும் தகவல்களுக்கு எங்களுடைய பாதுகாப்பு வளங்களைக் காணுங்கள்.




**ஹெட்ஸ்பேஸ் மினி**: ஹெட்ஸ்பேஸ் மற்றும் Snap ஆகியோர் இணைந்து, வழிநடத்தப்படும் தியானங்கள் மற்றும் மன முழுமைப் பயிற்சிகளை Snapchat பயனர்களுக்கு நேரடியாகச் செயலியிலேயே வழங்குகிறார்கள் ஹெட்ஸ்பேஸ் மினி-யின்மூலம், Snapchat பயனர்கள் நண்பர்களுடன் சேர்ந்து தியானப் பயிற்சிகளைச் செய்யவும், தேவை உள்ள நண்பர்களை நேர்விதமாகத் தூண்டும் ஊக்கமளிக்கிற செய்திகளை அனுப்பவும் ஆற்றல் பெறுகிறார்கள். குறிப்பு, இந்த வசதி தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளில் மட்டுமே கிடைக்கிறது.




**உங்களுக்காக இங்கு**: இந்தத் தேடல் கருவி, உள்ளூர் வளங்கள் மற்றும் தொழில்முறை, லாப நோக்கற்ற அமைப்புகளிடமிருந்து உள்ளடக்கங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது, நெருக்கடியில் இருப்பதுடன் தொடர்புடைய சொற்களை மக்கள் தட்டச்சு செய்யும்போது, இவற்றைக் காண்பிக்கிறது. இந்தத் தேடல் தலைப்புகளில் சில: மனச்சோர்வு, பதற்றம், துன்பத்தைச் சந்தித்தல், துன்புறுத்தல், உடல் சார்ந்த நேர்ச்சிந்தனை, LGBTQ மன நலன் மற்றும் பல.

**செயலியில் புகார் அளித்தல்**: எங்களுடைய செயலியில் புகார் அளித்தல் கருவி, தங்கள் நண்பர்கள் தங்களையே காயப்படுத்திக் கொள்ளக்கூடிய ஆபத்தில் இருக்கிறார்கள் என்று Snapchat பயனர்கள் கவலைப்படும்போது பெயர் குறிப்பிடாமல் எங்களுக்கு எச்சரிக்கை அனுப்ப அனுமதிக்கிறது. இந்தச் சூழ்நிலையைப் பற்றி Snap-க்கு எச்சரிக்கை அனுப்பும் நபர், தன்னைக் காயப்படுத்திக் கொள்ளுதல் மற்றும் நெருக்கடி நேரத் தொலைபேசி எண்கள் வளங்களை 20-க்கும் மேற்பட்ட நாடுகள், மொழிகளில் கொண்ட ஓர் உதவித் தளப் பக்கத்துக்குச் செயலியில் உள்ள ஆதரவைப் பெறும் நபர் ஆகிய இருவருக்கும் நாங்கள் வளங்களைப் பகிர்ந்துகொள்கிறோம்.

2017-இல், எங்கள் சமூகத்தின் உறுப்பினர்களுக்காகச் செயலியிலேயே வளங்களை நாங்கள் அறிமுகப்படுத்தினோம். இந்த இடையீடு, Snapchat வாடிக்கையாளர் சேவையிடமிருந்து வருகிற ஒரு செய்தியாகத் தோன்றுகிறது. உயிருக்கான ஓர் அச்சுறுத்தல் வரப்போகிறது என்று நாங்கள் நம்பும்போது, எங்கள் சட்டச் அமலாக்கச் செயல்பாடுகள் பிரிவு தானாகவே சட்டச் செயல்படுத்தல் துறையை அணுகும். Snapchat ஒரு தொழில்முறை மன நலன் இடையீட்டு வளம் இல்லை. நண்பர் அல்லது அன்புக்குரிய ஒருவர் ஆபத்தில் இருக்கிறார் என்றால், தற்கொலையைத் தடுத்தல் உதவித் தொலைபேசி எண், நெருக்கடி நேர உரைச்செய்தி இணைப்பு போன்ற நெருக்கடி நேரச் சேவைகளைப் பயன்படுத்துங்கள், அல்லது, 911ஐ அழையுங்கள்.

**பாதுகாப்பு ஸ்னாப்ஷாட் Discover சேனல்**: 'பாதுகாப்பு ஸ்னாப்ஷாட்' என்பது, டிஜிட்டல் பாதுகாப்பு மற்றும் உங்கள் Snapchat கணக்கைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான முக்கிய வழிகளைப் பற்றி Snapchat பயனர்களுக்குக் கற்றுத்தருவதில் கவனம் செலுத்தும் ஒரு கண்டறிதல் நிகழ்ச்சியாகும், இதில் இணையும்படி உங்கள் பதின் பருவத்து மகன் அல்லது மகளை ஊக்குவியுங்கள்! நினைவிருக்கட்டும், இந்தச் சேனல் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளில் மட்டும்தான் கிடைக்கிறது.

**வளப் பக்கம்**: உங்களுக்கும் உங்கள் பதின் பருவத்து மகன் அல்லது மகளுக்குமான பாதுகாப்புக் கூட்டு நிறுவனங்கள் மற்றும் வளங்களின் ஒரு முழுப் பட்டியலுக்கு, எங்களுடைய பாதுகாப்பு மையத்தைக் காணுங்கள்!

**ஸ்கேன் செய்ய, செயலியினுள் தட்டுங்கள் மற்றும் நிறுத்தி வையுங்கள்**

# உங்கள் பதின் பருவத்தினருடன் உரையாடுவது எப்படி

## உரையாடலைத் தொடங்கும் விஷயங்கள்

Snapchat-ஐப் பயன்படுத்துவதுபற்றி உங்கள் பதின் பருவத்து மகன் அல்லது மகளுடன் உரையாட இயலுவது முக்கியம் என்று நாங்கள் அறிவோம். அதனால்தான், நாங்கள் மைண்ட்அப் (MindUP), Crisis Text Line மற்றும் Snap பெற்றோர் ஆகிய அமைப்புகளில் உள்ள வல்லுனர்களுடன் இணைந்து, உரையாடலைத் தொடங்கும் சில விஷயங்களை உருவாக்கியுள்ளோம், Snap-இல் உங்கள் பதின் பருவத்து மகன் அல்லது மகளுடன் இணைவது எப்படி, சாத்தியமுள்ள கவலை தரும் நடவடிக்கைகளை அடையாளம் காண்பது எப்படி, செயலிக்குள் நலனைப் பின்பற்றுவது எப்படி ஆகியவற்றை இவை பேசுகின்றன.

### பங்கேற்றிடுங்கள்

உங்களுடைய சொந்த Snapchat கணக்கைத் தொடங்குவதன்மூலம், நீங்கள் செயலியை இன்னும் நன்றாகப் புரிந்துகொள்ளலாம், உங்கள் பதின் பருவத்து மகன் அல்லது மகளுடன் இன்னும் நன்றாக இணையலாம்.
**நிபுணர் குறிப்பு**: உங்கள் புதிய Snapchat-ஐப் பயன்படுத்துவதுபற்றி உங்களுக்குக் கற்றுத்தரும்படி உங்கள் பதின் பருவத்து மகன் அல்லது மகளைக் கேளுங்கள்!



### இந்த உரையாடலைத் தொடர்வதற்குக் கேட்கக்கூடிய சில மகிழ்ச்சியான கேள்விகள், இதோ:

- உன்னுடைய Bitmoji எப்படித் தோன்றுகிறது என்று நான் பார்க்கலாமா?
- நமக்காக ஒரு குடும்பத் தனிப்பட்ட கதை அல்லது குழு உரையாடலை உருவாக்க நீ விரும்புகிறாயா?
- நீ மிகவும் கூடுதலாகப் பயன்படுத்தும் வடிகட்டி எது?
- உங்களுக்கு மிகவும் பிடித்த Discover நிகழ்ச்சி எது? நான் எதையெல்லாம் விரும்புவேன்?
- Snapchat-இல் மிகச் சிறந்த நண்பர்கள் என்பது எப்படி வேலை செய்கிறது?
- உங்களுடைய மிக நீண்ட ஸ்னாப்ஸ்ட்ரீக் யார்?
- நான் ஒரு Snap-ஐச் சேமிக்க முடியுமா? நான் அதைச் சேமித்தால், அது எங்கே செல்கிறது?
- Snap வரைபடத்தில் நான் பேய் முறைக்குச் செல்வது எப்படி?
- இந்தச் செயலியில் உங்களுக்கு மிகவும் பிடித்த டேப் எது?
- நான் பதிவு செய்வதை என்னுடைய நண்பர்கள்தான் காணவேண்டும், அதை நான் உறுதிப்படுத்துவது எப்படி?
- உங்களுக்குப் பிடித்த Snap விளையாட்டு என்ன?


### ஒரு கவலையை அடையாளம் காணுதல்:

உங்கள் பதின் பருவத்து மகன் அல்லது மகளிடம் நீங்கள் கவனிக்கவேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பதை அறிந்துகொள்வது முக்கியம். உங்கள் பதின் பருவத்து மகன் அல்லது மகள் இணையத்தில் பிரச்சனையைச் சந்திக்கிறார், உங்களிடமிருந்து, ஓர் ஆலோசகரிடமிருந்து, அல்லது இன்னொரு பெரியவரிடமிருந்து அவருக்குச் சிறிது கூடுதல் ஆதரவு தேவைப்படலாம் என்பவற்றை இந்த நடவடிக்கைகள் தெரிவிக்கக்கூடும். இவற்றில் எவற்றையேனும் நீங்கள் கவனிக்கிறீர்களா?

- ஆளுமையில் வேறுபாடு (கூடுதல் பதற்றம், அச்சம், அல்லது சினம்)
- தொழில்நுட்பம் பற்றிய உரையாடல்களைத் தவிர்த்தல்
- தன்னுடைய தொலைபேசி அல்லது மடிக்கணினியைப் பயன்படுத்தாமல் தவிர்த்தல்
- நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரிடமிருந்து விலகியிருத்தல்
- பள்ளி நடவடிக்கைகளில் மாற்றம் (குறைந்த மதிப்பெண்கள், அடிக்கடி வகுப்புக்கு வராமலிருத்தல், வகுப்பில் தூங்கிவிடுதல்)
- தன்னைக் காயப்படுத்திக்கொள்ளும் சிந்தனைகள்



ஒருவேளை, இவற்றில் எவற்றையேனும் நீங்கள் கவனித்தால், கண்டிப்பாக உங்கள் பதின் பருவத்து மகன் அல்லது மகளிடம் இதைப்பற்றிப் பேசுங்கள், ஒரு தொழில்முறை வல்லுனருடைய உதவியை நாடுவதுபற்றிச் சிந்தியுங்கள், அல்லது, எங்கள் Here For You கருவியைக் காணுங்கள். நெருக்கடி அவசரக் கணங்கள் எவையேனும் வந்தால், **741741 என்ற எண்ணுக்கு KIND** என உரைச்செய்தி அனுப்புவதன்மூலம் 24/7 Crisis Text Line-ஐ அணுகலாம் என்பதை அவர்கள் அறிந்திருப்பதை உறுதி செய்யுங்கள். Snapchat சமூகத்துக்கு அவர்களுடைய பயிற்சி பெற்ற நெருக்கடி நேர ஆலோசகர்களுடைய இலவச, ரகசிய ஆதரவு கிடைப்பதை உறுதிசெய்வதற்காக, நாங்கள் அவர்களுடன் நேரடியாக இணைந்துள்ளோம்.




CRISIS TEXT LINE |



### நலனைப் பின்பற்றுதல்:

நீங்கள் பகிர்ந்துகொள்ள விரும்புகிற விஷயங்களை, நீங்கள் எவ்வளவு நேரத்துக்குப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறீர்களோ அவ்வளவு நேரத்துக்கு மட்டுமே மக்கள் காணும்படி Snapchat வடிவமைக்கப்பட்டுள்ளது. நாங்கள் புதிய தயாரிப்புகள் மற்றும் அம்சங்களைத் தயாரிக்கும்போதுகூட, எங்களுடைய வடிவமைப்பின்படி-பாதுகாப்பு என்கிற அணுகுமுறையைப் பயன்படுத்திதான் அவற்றை உருவாக்குகிறோம், எங்கள் சமூகத்தினரோ அவர்களுடைய நண்பர்களோ ஒரு மன நல நெருக்கடியைச் சந்திக்கும்போது அவர்கள் தடுத்தல் நலன் கருவிகள் மற்றும் வளங்களை அணுக உதவுகிறோம்.

## உங்கள் பதின் பருவத்து மகன் அல்லது மகளுடன் இதுபற்றிப் பேசுவதற்கான சில வழிகள் இதோ:

- நீங்கள் எப்போதாவது ஹெட்ஸ்பேஸ் பயன்படுத்தித் தியானம் செய்கிறீர்களா?
  தியானம் செய்வது, உடல்நலனை மேம்படுத்துவது அல்லது மனம் சார்ந்த விழிப்புணர்வைப் பின்பற்றுவதால் அழுத்தம் குறையலாம், நலன் மேம்படலாம்
- யாருடைய Snapchat-ஐப் பற்றியாவது நீங்கள் அறிக்கையிட வேண்டியிருந்தால், அதை எப்படிச் செய்வது என்று உங்களுக்குத் தெரியுமா?
- பாதுகாப்புக்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டுள்ள பாதுகாப்பு ஸ்னாப்ஷாட் Discover சேனலை நீங்கள் பார்ப்பீர்களா?
- Here For You என்பதில் நீங்கள் இணைந்துள்ளீர்களா? Snapchat-இல் உள்ள உங்களுடைய தேடல் பட்டையில் "Here For You" என்று தேடுவதன்மூலம் இதைக் கண்டறியலாம்
- Snapchat-இல் ஏதாவது உங்களுக்குத் தொந்தரவாகத் தோன்றினால், நீங்கள் பேசுவதற்கு யாராவது இருக்கிறார்கள் என்பதை நீங்கள் உணருகிறீர்களா?
- Snapchat-இல் உங்களுக்கு ஆதரவு வழங்கக் கிடைக்கும் வளங்கள் எவை என்று உங்களுக்குத் தெரியுமா?
- நீங்கள் செயலியினுள் எவ்வளவு நேரத்தைச் செலவிடுகிறீர்கள்?
- எப்போதாவது, செயலியைப் பயன்படுத்தும்போது நீங்கள் உணர்ச்சி மிகுதியாக உணர்கிறீர்களா? அப்படி உணரும்போது நீங்கள் என்ன செய்வீர்கள்?

"

**நம் வாழ்க்கைகளில் கூடுதல் மகிழ்ச்சியை, நலனைக் கொண்டுவரும் திறமை நம் அனைவருக்கும் உள்ளது. அதற்கு நாம் செய்யவேண்டியதெல்லாம், மன விழிப்புணர்வைப் பின்பற்றுதல், நன்றியுணர்வை வெளிப்படுத்துதல், கருணையுடன் நடந்துகொள்ளுதல் போன்ற நேர்விதமான மனப் பழக்கங்களைச் கடைப்பிடிப்பதுதான்.**

***: மோலி ஸ்டீவர்ட் லாவ்லர், PhD***

mindup For Life | The Goldie Hawn Foundation

"

## உங்கள் பதின் பருவத்து மகன் அல்லது மகளுடன் பேசியபிறகு:

நீங்களும் உங்கள் பதின் பருவத்து மகன் அல்லது மகளும் Snapchat பற்றி உரையாடுவதில் கைத்தேர்ந்துவிட்டீர்கள் என்பதால், வருங்காலத்துக்கான சில ஒப்பந்தங்களை அமைக்கலாம், நீங்கள் இந்த உரையாடல்களைத் தொடர்ந்து நிகழ்த்துவதை உறுதி செய்யலாம், இவை நல்ல விஷயங்களாகும்! ஒரு சமூக ஊடக ஒப்பந்தத்தை உருவாக்குவதுகூட நல்லதுதான், இதன்மூலம் இருதரப்பிலும் தனியுரிமை, நம்பிக்கையைப் பராமரிக்கலாம். இந்த வாக்குறுதிகளை வழங்குவது, இருதரப்பினருக்கிடையிலும் நம்பிக்கையைக் கொண்டுவர உதவலாம்.

உங்கள் பதின் பருவத்தினருடன் நலமான தகவல் தொடர்பை அமைக்கவும், அவர்கள் நலமான திரை மற்றும் சமூக ஊடகப் பழக்கங்களை உருவாக்கிக்கொள்வதை ஆதரிக்கவும் உரையாடல்களைத் தொடங்கிவைக்கும் சில விஷயங்கள், இதோ:

- பேசுகிற பழக்கத்தை உருவாக்கலாம்: பேசுவது மற்றும் கவனிப்பது ஆகியவற்றுக்கு நேரம் வழங்கலாம், எடுத்துக்காட்டாக, வீட்டில் எல்லாரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிடும்போது
- உங்கள் பதின் பருவத்து மகன் அல்லது மகளை உரையாடல்களில் பங்குபெறச் செய்யலாம், "இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்பதுபோன்ற கேள்விகளைக் கேட்கலாம், அவர்களுடைய கருத்துகளுக்கு வெளிப்படையாக பதில் சொல்லலாம்
- கவனச்சிதறல்களை நீக்கி, நேருக்கு நேர் பார்த்தபடி உண்மையாகக் கவனிப்பது எப்படி என்று கற்றுக்கொள்ளலாம்
- ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நேரத் தொகுப்பில் சமூக ஊடகங்கள் அல்லது தொலைபேசிக்கு "இடைவெளி" விடவேண்டும் என்று அனைவரும் ஒன்றாக ஒப்புக்கொள்ளலாம்
- இணைய ஆபத்துகள், பிரச்சனைகளைப் பற்றி வெளிப்படையாகப் பேசலாம், இணைய ஆபத்துகளைக் கையாள்வதற்கு அவர்கள் செய்யக்கூடிய தடை செய்தல் மற்றும் புகார் செய்தல் போன்ற எதார்த்த விஷயங்களை அவர்களுக்குக் கற்றுத்தரலாம்

உங்கள் பதின் பருவத்து மகன் அல்லது மகள் சமூக ஊடகத்தில் பாதுகாப்பாகவும் நலமாகவும் இருக்க உதவும் சில முக்கியமான வழிகாட்டுதல்கள், இதோ:

- சமூகப் பதிவுகளை உங்களுடைய நெருங்கிய வட்டத்துக்குள் மட்டும் வைத்திருப்பதன் முக்கியத்துவம் - உங்களுக்கு உண்மையாகத் தெரிந்த நண்பர்களுடைய நட்புக் கோரிக்கைகளை மட்டும் ஏற்றுக்கொள்ளுதல்
- எந்தவொரு பதிவையும் வெளியிடுமுன், WWGS? (இதைப்பற்றிப் பாட்டி என்ன சொல்வார்?) என்று உங்களை நீங்களே கண்டிப்பாகக் கேட்டுக்கொள்ளுங்கள்.
- சும்மா நிற்காதீர்கள்: உங்களை அசௌகரியமாக உணரச்செய்கிற எதையாவது பார்த்தால், அதைப்பற்றி அறிக்கை இடுங்கள்!
- எப்போதும் சமூக வழிகாட்டுதல்களுக்குள் செயல்படுங்கள்



# Snapchat சொற்களஞ்சியம் (A-Z)

**Discover:** முதன்மைச் செய்திகள் & பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளைக் காணுங்கள், Snap நேரடிப் படைப்புகள் மற்றும் பொதுமக்கள் ஊடகங்களும் இதில் இடம்பெறும்.

**Snapcode:** Snapcode என்பது, ஒரு சிறப்பு வகைப் படமாகும், இதை Snapchat-இல் ஸ்கேன் செய்தால் வெவ்வேறு விஷயங்களைச் செய்யலாம், எடுத்துக்காட்டாக, புதிய நண்பர்களைச் சேர்த்தல் அல்லது, வடிகட்டிகள் மற்றும் லென்ஸஸை தடை நீக்குதல்.

**Snap நட்சத்திரங்கள்:** பரவலான பார்வையாளர்களைக் கொண்ட உருவாக்குபவர்கள் (எடுத்துக்காட்டாக, தாக்கம் உண்டாக்குவோர் மற்றும் புகழ் பெற்றோர்) ஒரு தங்க நட்சத்திரத்தைப் பெறுவார்கள். நீங்கள் இந்த உருவாக்குபவர்களுடன் இணையலாம்.

**Snap வரைபடம்:** இந்த டேபின்மூலம், என்ன நடக்கிறது என்று காணுங்கள், உங்கள் நண்பர்களைக் கண்டறியுங்கள், அல்லது, ஒரு துணிகரச் செயலுக்குச் செல்ல ஊக்கம் பெறுங்கள். இதில் இடத்தைப் பகிர்தல் இயல்பு நிலையில் அணைக்கப்பட்டுள்ளது: நீங்கள் உங்கள் இடத்தை நண்பர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறீர்களா, அல்லது, பேய் முறையின்மூலம் அதை உங்களிடமே வைத்துக்கொள்ள விரும்புகிறீர்களா என்பதை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்.

**அரட்டை:** வீடியோ, தொலைபேசி அல்லது உரைச்செய்தி அரட்டைகளை உங்களுடைய உண்மை நண்பர்களுக்கு அனுப்புதல்

**ஆக்கப்பூர்வக் கருவிகள்:** நீங்கள் ஒரு Snap-ஐ உருவாக்கிய பின், ஸ்டிக்கர்கள், உரை, ஓவியங்கள், மற்றும் பலவற்றை அதில் சேர்க்கலாம்.

**இடச் சேவைகள்:** வடிகட்டிகள், தேடல், Snap வரைபடம், விளம்பரம் செய்தல், இன்னும் பல வசதிகளுக்கு Snapchat உங்கள் இருப்பிடத்தைப் பயன்படுத்துகிறது. இதைச் செயல்படுத்தினால், நீங்கள் Snapchat-ஐத் திறந்துவைத்திருக்கும்போது உங்கள் இருப்பிடம் புதுப்பிக்கப்படும்.

**எங்கள் கதை:** சமூகத்திலுள்ள வெவ்வேறு Snapchat பயனர்களால் சமர்ப்பிக்கப்பட்ட Snaps-இன் ஒரு தொகுப்பு. எங்கள் கதையில் தோன்றும் Snaps பொது உள்ளடக்கமாகும், இது Snap வரைபடங்களிலோ தளத்துக்கு வெளியிலோகூடக் காண்பிக்கப்படலாம்.

**என் கண்கள் மட்டும்:** இந்த அம்சம் நினைவுகளில் காணப்படுகிறது, ஒரு Snapchat பயனர் தன்னுடைய நினைவுகளில் சேமிக்கப்பட்டுள்ள Snaps மற்றும் கதைகளைத் தன்னுடைய "என் கண்கள் மட்டும்" என்ற தாவலுக்கு நகர்த்தலாம், இதைப் பார்ப்பதற்கு ஒரு கடவுக்குறியீடு தேவை.

**என் கதை:** கால வரிசைப்படி இயங்கும் Snaps-இன் ஒரு தொடர், இதை நண்பர்கள் 24 மணிநேரங்களுக்குக் காணலாம். இதை யாருடன் பகிர்ந்துகொள்வது என்கிற தெரிவை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்: அனைவருடன், என் நண்பர்களுடன் அல்லது ஒரு தனிப்பயன் பட்டியலில் உள்ள நபர்களுடன் மட்டும்.

**கேமரா:** புகைப்படங்கள் அல்லது வீடியோக்களாகிய Snaps-ஐ உங்கள் நண்பர்களுக்கு நீங்கள் அனுப்பும் இடம்!

**சொந்தக் கதை:** உங்கள் சொந்தக் கதைக்கு நண்பர்களைத் தேர்ந்தெடுங்கள்! இதில் இணைகிற யாரும் இந்தக் கதையில் சேரலாம், பிற உறுப்பினர்களைக் காணலாம்.

**தனிப்பட்ட கதை:** தனிப்பட்ட கதைகளின்மூலம் Snapchat பயனர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட சில நண்பர்களுடன் மட்டும் பகிர்ந்துகொள்ளப்படுகிற ஒரு கதையை உருவாக்கலாம்.

**தேடல்:** தேடல் பெட்டியில் தட்டச்சு செய்தால் நீங்கள் வெவ்வேறு விஷயங்களைக் காணலாம், அதன்மூலம், உங்களுக்கு மிகவும் பொருந்துவது எது என்று கண்டறியலாம்; எடுத்துக்காட்டாக, நண்பர்களைக் கண்டறிதல் அல்லது, Here For You என்னும் கருவியைக் காணுதல்.

**நினைவுகள்:** உங்களுடைய நினைவுகளில் சேமிக்கப்பட்டுள்ள, ஒரு Snapchat பயனரின் தனிப்பட்ட Snaps மற்றும் கதைகளின் தொகுப்பு.

**பேய் முறை:** இதைச் செயல்படுத்தினால், உங்கள் நண்பர்களால் Snap வரைபடத்தில் உங்கள் இடத்தைக் காண இயலாது!

**லென்ஸஸ்:** ஒரு முகத்தில் தட்டி லென்ஸ் கரோசலைத் தொடங்குங்கள். லென்ஸஸ் உங்கள் Snap-களில் 3D தாக்கங்கள், பொருட்கள், பாத்திரங்கள் மற்றும் மாற்றங்களைச் சேர்க்கின்றன.

**வடிகட்டிகள்:** Snap இல் வலதுபுறமாக ஸ்வைப் செய்யவும், வடிகட்டி விருப்பங்கள் வண்ண விளைவுகளைச் சேர்க்கவும், இடத் தகவலைக் காண்பிக்கவும், உங்கள் Bitmoji ஐக் காண்பிக்கவும், நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதைக் காட்டவும் மேலும் பலவும் தோன்றும்.

**விரைவுச் சேர்க்கை:** விரைவுச் சேர்க்கையில் தோன்றும் நண்பர் பரிந்துரைகள் சில காரணிகளின் அடிப்படையில் அமைகின்றன, எடுத்துக்காட்டாக, நீங்கள் ஏற்கனவே யாருடன் நண்பர்களாக உள்ளீர்கள் மற்றும் நீங்கள் யாருடன் இணைந்துள்ளீர்கள் போன்றவை.

**விளையாட்டுகள் மற்றும் Snap மினிகள்:** விளையாட்டுகள் என்பவை, Snapchat-இல் உங்கள் நண்பர்களுடன் நேரம் செலவிடுவதற்கான ஒரு மகிழ்ச்சி வழியாகும்! Snap மினிகள் என்பவை சிறு அளவிலான செயல்பாடுகளாகும், இவை நண்பர்களுக்காக உருவாக்கப்பட்டவை. எடுத்துக்காட்டாக, ஒரு திரைப்பட இரவைத் திட்டமிடுதல் அல்லது ஃப்ளாஷ்கார்ட் அட்டைகளின் அடுக்கொன்றை உருவாக்குதல்.

**ஸ்ட்ரீக்குகள்:** இது பொதுவாக அரட்டைகள் திரையில் உங்கள் நண்பருடைய பெயருக்கு அருகில் 🔥 எமோஜி மூலம் காண்பிக்கப்படுகிறது. நீங்கள் அவருடன் எத்தனை நாளாக ஸ்ட்ரீக்கில் (அதாவது, ஒருவருக்கொருவர் Snaps-ஐப் பகிர்ந்துகொள்கிற நிலையில்) உள்ளீர்கள் என்ற கணக்கை இது தெரிவிக்கிறது. Snap ஸ்ட்ரீக்குகள் என்பவை, நீங்கள் யாருடன் மிகுதியாக Snap செய்துவருகிறீர்கள் என்பதை அங்கீகரிக்கிற ஒரு நகைச்சுவையான, மனதை லேசாக்க கூடியவைகள்!

**ஸ்பாட்லைட்:** Snapchatடின் உலகத்தை ஒரே இடத்தில் கண்டறிந்து, இந்த பொழுதுபோக்கு தளத்தில் எங்கள் சமூகம் முழுவதும் முன்னோக்குகளைப் பாருங்கள்



Snap Inc.

ஜூலை 2021 பதிப்பு